தலைப்பு 216 சமூக சேவைகள் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 216 – சமூக சேவைகள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சுமூக சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சுமூக சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 தொடர்பில் கவணம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் சுமூக சேவைகள் திணைக்களத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை சுமூக சேவைகள் திணைக்களத்தினதும், பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் சுமூக சேவைகள் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் சுமூக சேவைகள் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	ரூபா 45,847,500 தொகை பெறுமதியான போக்குவரத்து உபகரணங்களினுள் உட்படுத்தப்படாத 11 டிரக்டர் வண்டிகள், 02 பவுசர்களின் பதிவு செய்யப்பட்ட உரிமை 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் சமூக சேவைத் திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்பட்டதுடன், இந்த வாகனங்கள் வேறொரு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதா, அப்புறப்படுத்தப்பட்டு அல்லது ஏனைய செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பான தகவல்கள் ஏதும் திணைக்களத்தில் காணப்படவில்லை.	திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டு காணப்படுகின்றனவா என பரிசோதனை மேற்கொண்டு அறிவிக்கும் படி பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அனைத்து சமூக சேவைகள் உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. கிடைக்கக்கூடிய பதில்களின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என.	திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்தல் மற்றும் உரிய முறையில் அப்புறப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ii)	05 தொழில்பயிற்சி நிறுவனங்கள், 02 சிறுவர் வழிகாட்டல் நிலையங்கள் 02 தடுப்புக் காவல் மற்றும் புனர்வாழ்வு வீடுகள் அமைந்துள்ள 73.376 ஹெக்டயர் தொகை மற்றும் 10.3804 ஹெக்டயர் இற்கான 05 காணிப் பகுதிகள் மீளாய்வாண்டு இறுதி வரை உரித்தாக்கி கணக்கீடு செய்திருக்கவில்லை.	காணிகளை உரித்தாக்கல் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்தல் செய்முறை முடிவடைந்த பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	காணிகள் மற்றும் கட்டிடங்களை உரித்தாக்கி அவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு	**செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரைகள்**	**இந்த அறிக்கையின் பந்திகளுடன் தொடர்பு**
1.6.1(அ)	தொழிற்பயிற்சி நிறுவனங்கள், புனர்வாழ்வு நிலையங்கள் மற்றும் வழிகாட்டல் நிலையங்கள் நிறுவுவதற்காக திணைக்களத்திற்கு நன்கொடையாக கிடைத்திருந்த சுமார் 29 ஏக்கர் சதுர அலவைக் கொண்ட 06 காணிகள் நன்கொடைக்காக கிடைக்கப் பெற்று 11 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும், அந்தக் காணிகளில் மற்றும் அதில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து காணி மற்றும் கட்டிடங்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.	1.6.1(அ)(ii)
1.6.1(ஆ)	07 தொழில் பயிற்சி நிறுவனங்கள் நிறுவப்பட்டிருந்த காணிகளின் சட்டரீதியான உரிமையை திணைக்களத்திற்கு உரித்தாக்கியிருக்காமை மற்றும் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்திருக்காததுடன், கடந்த 11 வருட காலம் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்களின் கிரயத்தை இனங்கண்டு நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைகள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.	1.6.1(அ)(ii)
2.3	அரச வாகனம் ஒன்று கற்கை சாதனமென பயன்படுத்தப்படின் முறையான செய்முறை ஒன்றின் மூலம் வாகனத்தை அப்புறப்படுத்தி பதிவு செய்தலை மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இரத்துச் செய்த பின்னர் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், வத்தேகம தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கியிருந்த 05 வாகனங்களின் செஸி இலக்கங்களுடன் கற்கைச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், வத்தேகம் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் காணப்படும் 19 மோட்டார் சைக்கிள்கள் கெடவல தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும், மோட்டார் சைக்கிள்களின் இலக்கத் தகடுகளுடன் அந்த நிறுவனத்தில் வைக்கப்பட்டிருந்தது.ஷ	1.6.1(அ)(i)

3.1.5	2017 ஆண்டின் போது நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2022 திசெம்பர் 20 திகதி திறக்கப்பட்டிருந்த கிளிநொச்சி தொழிற்பயிற்சி நிறவனத்தின் நிர்மாண வேலைக்காக ரூபா 1,280,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், காணியின் பெறுமதி ரூபா 93,630,000 தொகை என அவதானிக்கப்பட்டது. 2023 மே மாதத்தில் இரண்டு பாடநெறிகளுக்காக பயிலுனர்கள் சேர்க்கப்பட்டு பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 ஜனவரி அளவில் விரிவுரையாளர்கள் காணப்படாமையால் பாடநெறி நடாத்துதல் நிறுத்தப்பட்டிருந்தது. அனைத்து வசதிகளுடன் பாரிய தொகையொன்று செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்த தொழிற்பயிற்சி நிலையம் தற்போது நிலையப் பொறுப்பதிகாரி, அபிவிருத்தி உத்தியோக்கத்தர் ஆகிய உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைக்கப்பட்டு விளைவற்று காணப்பட்டதுடன், பாதுகாப்புப் பிரிவு மற்றும் சுத்திகரிப்புப் பிரிவுக்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டு வருகின்றது. அதன்படி, இந்த நிலையத்தின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாமல் இருந்தது.	4.2(அ)(ii)
3.2(ஈ)	2023 ஆண்டின் தொழிற்பயிற்சி பாடநெறிகளுக்காக 11 தொழிற்பயிற்சி நிலையங்களுக்காக ஆட்சேர்ப்பினை கவனம் செலுத்தும் போது 06 நிலையங்களில் 450 பேர்களுக்காக தங்குமிட வசதிகள் மற்றும் பயிற்சி பெறும் வசதிகள் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது 288 பேர் மாத்திரம் பயிற்சி பெறுவதற்காக சேர்க்கப்பட்டிருந்தமையால் அந்த 06 நிலையங்களும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.	4.2(அ)(i)

3. நிதி மீளாய்வு

3.1 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு	பதவியணி உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய பதவியணி சட்டத்தின் கூட்டங்களின் போது உள்ளகக் கட்டுப்பாட்டு முறை மற்றும் அதன் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் அதற்குரிய தேவையான சரி செய்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் தொடர்பாக கணக்கீட்டு	தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆவது பிரிவில் ஏற்பாடுகளின் படி உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஆக்கபூர்வமாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு

பேணிச் செல்லப்படுகின்றதென கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிதுடன், அந்த முறைமையை வெற்றிகரத் தன்மை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமையை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தல்கள் 2025 ஏப்ரல் 11 திகதி கடிதம் ஒன்றின் மூலம் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது என.	அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

	அவதானிப்புக்கள்			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	**பெறுமதி ரூபா**	**இணங்காமைகள்**		
(அ)	தாபனக் கோவையின் அத்தியாயம் XV பந்தி 5.2	667,920	2019 ஜனவரி 21 திகதி முதல் 2024 ஜனவரி 20 திகதி வரை சம்பளம் இன்றி வெளிநாட்டு விடுமுறை பெற்றுச் சென்றுள்ள பெண் உத்தியோகத்தர் ஒருவர் மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை மீண்டும் சேவைக்கு வந்திருக்கவில்லை. அதன்படி, கணிக்கப்பட்ட தணடத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வெளிநாட்டு விடுமுறை முடிவடைந்து சேவைக்கு வராமை காரணமாக 2024 ஜூன் 05 திகதி சேவையினை விட்டுச் செல்லல் அறிவித்தல் மற்றும் உடன்படிக்கைக்கு இணங்க குறிப்பிட்ட தொகையை செலுத்தும் படி அறிவித்து வெளிநாட்டு முகவரிக்கு அனுப்பப்பட்ட கடிதம் திரும்ப எமக்குக் கிடைத்துள்ளது. முதலாவது நினைவூட்டல் கடிதம் 2024 ஒக்தோபர் 18 திகதி அவரின உள்நாட்டு முகவரிக்கு அனுப்பப்பட்டது. பெண்	தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும்.

				உத்தியோகத்தரின் வெளிநாட்டு முகவரி தொடர்பாக உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு 2025 மே 15 திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது என.	
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 09 பந்தியின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)	95,000 91,200	நிமித்தக் கட்டுநிதி பெற்றுக்கொள்ளும் போது சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய உச்சமட்ட துணைக் கட்டுநிதி ரூபா 80,000 தொகையாக காணப்பட்ட போதிலும், அதற்கு இணக்கமின்றி திணைக்களத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் இருவரினால் அந்த வரையறையை மிகைத்து துணைக் கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.	ரிதிகம நிறுவனத்திற்காக சமையலறை உபகரணங்களின் கட்டாயத் தேவைப்பாடு காணப்பட்டதென, நிலையப் பொறுப்பதிகாரியினால் தொடர்ச்சியாக அறிவித்திருந்தமையால் துணைக் கட்டுநிதியொன்று வழங்கப்பட்டது. கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் எதிர் காலத்தில் சரி செய்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என.	நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும்.
(இ)	நிதிப் பிரமாணம் 371(2) இன் பந்தி (ஆ)	144,900	நிமித்தக் கட்டுநிதி வழங்கக் கூடிய உச்சமட்ட எல்லையினை மிகைத்து கிளிநொச்சி தொழிற்பயிற்சி நிறுவனத்தின் நிலையப் பொறுப்பதிகாரியினால் நிமித்தக் கட்டுநிதி பெற்றிருந்த போதிலும், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.	கிளிநொச்சி தொழில்பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த துணைக்கட்டுநிதி வரையறை தவறுதலாக மிகைத்திருந்தது என.	நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும்.

(ஈ)	நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) மற்றும் பந்தி 31(5)	2,094,063	நிமித்தக் கட்டுநிதி பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தரினால் அந்தக் கருமம் முடிவடைந்தவுடனே தீர்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், தொழில்பயிற்சி நிறுவனங்களின் மற்றும் தலைமை அலுவலக உத்தியோகத்தர்களினால் ஆண்டின் போது 65 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்டிருந்த முற்பணங்கள் 16 நாட்கள் முதல் 336 நாட்கள் வரையான கால வீச்சொன்று தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது.	முற்பணங்கள் பெறப்பட்டு தீர்ப்பதற்கு தாமதமடைந்த சந்தர்ப்பங்களை கவனத்தில் எடுத்து அவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படாத முறையில் எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கும் படி உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.	நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும்.
(உ)	2024 திசெம்பர் 18 திகதிய 05/2024 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பந்திகள் 02(i)(அ) மற்றும் 04	-	பொது ஆதனங்கள் காணாமல் போதல் மற்றும் முறைகேடான பயன்பாட்டினை தடுத்தல் போலவே அரச நிதி ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக அரசின் அனைத்து வாகனங்களையும் உரிய முறையில் பயன்படுத்துதல், ஆவணப்படுத்தி நடாத்திச் செல்லல் மற்றும் அறிக்கையிடல் அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களின் கட்டாயக் கருமம் ஒன்றாகும்.	திணைக்களத்திற்கு சொந்தமான பிரதேச செயலகங்களுக்கு இணைத்துள்ள ஓட்ட நிலையில் காணப்படாத வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என.	சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும்.

3.3 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்கள உத்தியோகத்தரினால் நான்கு சந்தர்ப்பங்களில் ரூபா 109,660 தொகை நிமித்தக் கட்டுநிதி தேவையான காலத்திற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் துணைக் கட்டுநிதி பெறப்பட்டிருந்ததுடன், அவற்றில் 50 சதவீதத்தை விட மிகையான தொகையொன்று கையில் மீதியாக இருந்தது. இந்த மீதித் தொகை கணிசமான காலமொன்று கையில் தடுத்து வைக்கப்பட்டு தீர்க்கப்பட்டிருந்தது. அதேபோல் நிமித்தக் கட்டுநிதி பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்கள் முதல் பெற்றிருந்த கட்டுநிதியை தீர்ப்பதற்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி, நிமித்தக் கட்டுநிதி பெற்றுக்கொள்ளல் மற்றும் தீர்த்தல் கணிசமான காலமொன்று தாமதமடைவதன் காரணமாக பணத்தை கையில் வைத்திருத்தல் மூலம் நிதி ஒழுங்கீனங்கள் ஏற்பாடும் ஆபத்து நிலையொன்று காணப்பட்ட போதிலும், திணைக்கள முகாமைத்துவத்தின் அது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு மிக பலவீன மட்டத்தில் காணப்பட்டது.	ITMIS முறைமை ஊடாக கட்டுநிதி விண்ணப்பித்து கிடைப்பதற்கு 02 வாரங்கள் கடப்பதனால் 02 வாரங்களுக்கு முன்னர் உறுதிச் சீட்டுக்களை சமர்ப்பிக்கும் படி உரிய உத்தியோகத்தர்களை அறிவுறுத்தப்பட்டது என.	நிமித்தத் துணைக் கட்டுநிதி தொடர்பாக உரிய சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணத்திற்கு இணங்க செயற்படுமாறு உத்தியோத்தர்களை அறிவுறுத்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப் பொறுப்புகளை நிறைவேற்றாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 வருடாந்த மதிப்பீட்டின் கீழ் ரூபா 11 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த புனர்வாழ்வுத் திட்டங்கள் தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையின் படி மீளாய்வாண்டின் போது ரூபா 6.10 மில்லியன் தொகை எனப்படும் 55 சதவீத ஏற்பாடுகள் கூட்டங்களுக்காக மற்றும் சுவாபிமானி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும்,	மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மட்டத்தில் 174,719 அங்கவீனமுற்றோர் இனங் காணப்பட்டிருந்ததுடன், அந்த நபர்களுக்காக சமூக சேவை உத்தியோகத்தர்களினால் புனர்வாழ்வுத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். பிரதேச செயலகப் பிரிவொன்றில் ஒரு மாதத்தில் இரண்டு நபர்களுக்காக திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன், அந்தத் தகவல்கள் google	ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தி குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றப்பட வேண்டும்.

அங்கவீனர்களை வலுவூட்டும் 30 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு மற்றும் 70 அங்கவீனமுற்றோர்களுக்காக துணை உபகரணங்கள் வழங்குவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், 22 விஷேட செயற்திட்டங்கள் செயற்படுத்துதல் மற்றும் 60 நபர்களுக்காக துணை உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டளவில் இனங்காணப்பட்டிருந்த அங்கவீனர் எண்ணிக்கை 174,369 ஆக காணப்பட்டிருந்ததுடன், அவற்றின் 157,628 நபர்களின் தகவல்கள் மாத்திரம் கூகுல் சீட் (google sheet) இல் உட்படுத்தப்பட்டிருந்தது. அவர்களுக்காக 16,163 புனர்வாழ்வுத் திட்டங்கள் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.	sheet இல் உள்ளீடு செய்யப்பட வேண்டும். இவ்வாறு அங்கவீனமுற்றோருக்காக தயாரிக்கப்படும் திட்டங்கள் ஊடாக அந்த நபர்களுக்காக பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது. அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூபா 3 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டதுடன், பிரதேச செயலகங்களில் இருந்து சமர்ப்பிக்கப்படுகின்ற செயற்திட்ட மதிப்பீடுகளின் படி 22 செயற்திட்டங்களுக்காக மாத்திரம் ஏற்பாடுகள் வழங்க முடியுமாக இருந்தது. உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1.4 மில்லியன் தொகையினையும் கிடைத்த கோறிக்கை மற்றும் மதிப்பீட்டின் படி 60 நபர்களுக்கு மாத்திரம் உதவி வழங்க முடியுமாக இருந்தது.	

4.2 எதிர்ப்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) சமூக சேவைத் திணைக்களத்தின் அங்கவீன பிள்ளைகளுக்காக நாடு பூராகவும் 11 தொழில்பயிற்சி நிலையங்கள் நடாத்தப்பட்டு வருவதுடன், அந்த நிறுவனங்களில் பிள்ளைகளுக்காக 51 வதிவிட பாடநெறிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. பாடநெறிகளை நடாத்துவதற்காக 53 தொழிற்பயிற்சி ஆலோசகர்களும் 161 ஏனைய பதவியணியினரும் அந்த தொழிற்பயிற்சி நிறுவனங்களில் கடமையாற்றுகின்றனர்.		
(i) 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பிள்ளைகளை சேர்த்தல் கொள்திறன் மற்றும் கொள்திறனை பயன்படுத்தலை இணைக்கஞ் செய்த போது 07	சமூக சேவைத் திணைக்களத்திற்கு சொந்தமான தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு நாடு பூராகவும் பரவியுள்ள 16 – 35 வயதுக்குட்பட்ட அங்கவீன இளைஞர் யுவதிகள்	தொழிற்பயிற்சி நிறுவனங்கள் நடாத்தபடுவதனை குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	தொழிற்பயிற்சி நிறுவனங்களின் கொள்திறன் பயன்பாடு 50 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது.	சேர்க்கப்படுகின்றனர். இவர்களில் அனேகமானோர் புத்திசுயாதீனமற்றவர்கள் ஆவர். இந்த ஆட்களை சமூகமயப்படுத்தல் கடினமானதொன்றாகும். முறையான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பாடநெறிக்கான கொள்திறனையும் மிகைத்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், ஆட்சேர்க்கும் சந்தர்ப்பத்திலும் பங்குபற்றாமல் சிலர் தொழில்பயிற்சியை விட்டுச் செல்லல் கட்டுப்படுத்த முடியாதொன்றாகும் என.	
(ii)	2023 மற்றும் 2024 ஆண்டுகளின் ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும் பாடநெறிகளை பூர்த்தி செய்த மாணவர் எண்ணிக்கையின் படி ஒரு மாணவனுக்காக ஒரு நிறுவனத்தினால் ரூபா 335,142 தொகை முதல் ரூபா 1,075,738 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்த போதிலும், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. கிளிநொச்சி தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு சேர்க்கப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 2023 ஆண்டு 15 தொகையும், 2024 ஆண்டு 33 தொகையும் காணப்பட்ட போதிலும் எவறும் பாடநெறியை பூர்த்தி செய்திருக்கவில்லை.	ஒவ்வொரு பயிலுனருக்கும் தனிப்பட்ட வகையில் அவர்களின் திறமை மற்றும் தொழிற்திறனை இனங் கண்டு தனிநபர் திட்டம் தயாரிக்கப்பட்டு சுயதொழிலுக்காக ஈடுபடுத்தக்கூடிய பயிலுனர்களுக்காக தொழில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு விஞ்ஞான செய்முறை ஒன்றை கடைபிடித்து தொழிற்பயிற்சி அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. அதன்படி, பயிளுனர்களை தொழிற்பயிற்சியின் மூலம் வலுப்படுத்தி சிறந்த ஆளுமையுடைய பொருளாதார போக்கில் செயற்படும் உயிர்ப்புள்ள பங்காளர் ஒன்றாக சந்தர்ப்பத்தை வழங்குதல் உட்பட தொழிற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன என.	நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றக்கூடியவாறு வளங்களை பயன்படுத்த வேண்டும்.
(iii)	2023 மற்றும் 2024 ஆண்டுகளில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கையில் பாடநெறிகளை பூர்த்தி செய்த எண்ணிக்கை மற்றும் தொழில் மயப்படுத்தப்பட்ட எண்ணிக்கையை கவனத்தில்	இந்த ஆண்டு முதல் ESPD செயற்திட்டத்தினூடாக செயற்படுத்தப்படுகின்ற சிஹின ஸ்ரீ லங்கா செயற்திட்டத்தின் ஊடாக அங்வீனர்களை தொழில்களில் தக்கவைப்பதற்கான	தொழிற்பயிற்சி பாடநெறிகளை அறிமுகப்படுத்தும் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	எடுத்த போது 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் பாடநெறிகளை பூர்த்தி செய்த எண்ணிக்கையில் தொழில் வாய்ப்பு பெற்ற எண்ணிக்கை முறையே 38 சதவீதம் மற்றும் 23 சதவீதம் ஆகும்.	நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படும். அதன்மூலம் இந்த நிலைமையை தவிர்ப்புச் செய்வதற்கு முடியுமாக இருக்கும்.	
(ஆ)	திருத்திய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி பாடநெறிகளை பூர்த்தி செய்த 150 தொழிற்பயிற்சி பெற்றோருக்கு கருவிக் கலத் தொகுதி வழங்குவதற்காக ரூபா 5 மில்லியன் தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், முன்னேற்ற அறிக்கையின் படி ரூபா 3.3 மில்லியன் செலவிடப்பட்டு 82 பயிற்சி பெற்றவர்களுக்கு மாத்திரம் கருவிக் கலத் தொகுதிகள் வழங்கப்பட்டிருந்தது. மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2022 ஆண்டு தொழிற்பயிற்சியை பூர்த்தி செய்த பயிலுனர் இருவருக்கு ரூபா 25,000 தொகை மற்றும் ரூபா 26,000 தொகை பெறுமதியான கருவிக் கலத் தொகுதிகள் வழங்கப்பட்டிருந்தது.	2022 – 2023 ஆண்டுகளுக்குரிய கருவிக் கலத் தொகுதிகள் வழங்குவதற்காக 2025 ஆண்டு 11 பயிலுனர்களுக்கு ஏற்பாடுகள் அனுப்பப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் மூலம் 50 பயிலுனர்களுக்காக தையல் இயந்திரங்கள் மற்றும் கணினிகள் வழங்குவதற்காக மற்றும் ADB நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 45 பயிலுனர்களுக்காக கருவிக் கலத் தொகுதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதன்படி, ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் ரூபா 3.3 மில்லியனிற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது என.	ஆண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்த கருமங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	தொழிற்பயிற்சி நிறுவனங்களில் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் முகாமைத்துவம் தொடர்பான பரிசோதனையின் போது ஆலோசகர்கள் காணப்பட்ட போதிலும், குறிப்பிட்ட நிறுவனங்களில் பாடநெறிகள் நடாத்தப்படாமை, பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் அந்த இடங்களில் ஆலோசகர்கள் காணப்படாமை ஆகிய சிக்கல்கள் காணப்படுவதுடன், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டிருந்த போதிலும், தொழிற்பயற்சி நிறுவனங்கள் தொடர்பான முறையான முகாமைத்துவக் கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கை திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தின் இணைய தளம் தற்போது நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளது எனவும், எதிர் காலத்தில் கண் காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கை இதைவிட முறைப் பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	இணைய தளம் நாளதுவரை ஆக்கப்பட வேண்டியதுடன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தொடர்பாக ஆலோசகர்களை உரிய முறையில் முகாமைத்துவம் மேற்கொண்டு படநெறிகளை கண்காணிப்பு மற்றும் நடாத்திச் செல்லும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சமூக சேவைத் திணைக்களத்தினால் 1992 – 2012 ஆண்டு வரை போதைப் பழக்கமுள்ளவர்களை புனர்வாழ்வு மையமொன்றென வொக்ஷோல் வீதியில் நவோத்ய நிறுவனம் நடாத்திச் செல்லப்பட்டதுடன், அதற்காக வீதவரி செலுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2012 ஆண்டின் போது கட்டிடத்திலிருந்து அகன்றிருந்த போதிலும், கட்டிடத்திலிருந்த அகன்றிருந்தமை உரிய முறையில் அறிவிக்கப்படாமையால் 2012 ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 திகதி வரை நிலுவை வீதவரியாக ரூபா 2,789,684 தொகை கொழும்பு மாநகர சபையின் நகர திறைசேரிக்கு செலுத்துவதற்கு திணைக்களத்திற்கு நேரிட்டிருந்தது. மேலும், இந்தக் காணி மற்றும் கட்டிடத்திலிருந்து வதிவினை விட்டுச் செல்லும் போது அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்படாமையால் 12 வருடங்களை விட மிகையான காலம் மேற்கூறிய கட்டிடம் விளைவற்று காணப்பட்டது.	இந்தக் காணி அரசுக்கு சொந்தமான காணியொன்றென அறிவித்தல் ஒன்று காட்சிப்படுத்தும் படி கொழும்பு பிரதேச செயலாளருக்கு 2024 திசெம்பர் 18 திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. வீதவரி செலுத்தல் தொடர்பாக கொழும்பு மாநகர சபையின் பொருளாளருடன் கலந்துரையாடப்படவுள்ளது.	நிலுவை வீதவரி தொடர்பான முகாமைத்துவம் சரியான தீர்மானம் ஒன்று அணுகவேண்டியுள்ளது.

5. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குதல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களின் கீழ் இனங்காணப்பட்டிருந்த முதலாவது அபிவிருத்திக் குறிக்கோளாகிய 2030 ஆண்டளவில் கல்வியில் ஆண் பெண் சமூகத் தன்மை மீது காணப்படும் அடிப்படை வித்தியாசங்களை அகற்றுதல், கல்வியில் அனைத்து மட்டங்களுக்கும் நுழைதலை உறுதிப்படுத்தல் மற்றும் அங்கவீனர்களுக்கு உள்நாட்டாளர்களுக்கு மற்றும் கவனம் செலுத்தப்பட வேண்டிய பிள்ளைகளுக்கு தொழில்பயிற்சி	தொழிற்பயற்சி நிறுவனங்களூடாக தொழில் வழங்கிய நபர்கள் தொடர்பாக தர முறைமையொன்று மீளாய்வாண்டின் போது நிருவியிருக்காத போதிலும், தற்போது அனைத்து நிறுவனங்களினதும் தகவல்களை ஒன்றினைத்து தர முறையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	2030 அளவில் இலக்காகிய குறிக்கோளை அடைந்து கொள்ளக்கூடியவாறு குறிப்பிட்ட அலுவல்கள் மேற்கொள்ள வேண்டும்.

	வழங்குவதற்காக சந்தர்ப்பமளித்தலாக காணப்பட்ட போதிலும், திணைக்களத்தின் நாடு பூராகவும் பரந்துள்ள அங்கவீனர்கள், கவனம் செலுத்தப்பட வேண்டிய பிள்ளைகள் போன்ற இந்தக் குறிக்கோளுக்குரிய தரப்பினர் எண்ணிக்கை மற்றும் தகவல்கள் அடங்கிய தரவு முறைமையொன்று காணப்படாமையால் வருடாந்தம் வெற்றியின் சுட்டெண் ஊடாக 2030 ஆண்டளவில் அந்தக் குறிக்கோளை அடைந்துகொள்ள காணப்படும் இயலுமை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.		
(ஆ)	2030 அளவில் அங்கவீனர்கள் மற்றும் இளைஞர்கள் அடங்கிய அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்காக ஆக்கபூர்வமான மற்றும் மிகச் சிறந்த தொழில் சந்தர்ப்பம் வழங்குதல் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களின் கீழ் இனங்காணப்பட்டிருந்த இரண்டாவது அபிவிருத்திக் குறிக்கோளாக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது அந்த சந்தர்ப்பங்கள் வழங்கியிருந்த எண்ணிக்கையை இனங்கண்டிருக்கவில்லை. முழு நாடும் அடங்கக்கூடியவாறு நாளதுவரை ஆக்கப்பட்ட அங்கவீனர்கள் மற்றும் இளைஞர்களின் தர முறைமை காணப்படாமையால் 2030 ஆண்டளவில் அந்தக் குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது போதியளவு இலக்கு வெற்றிகொள்ளப்பட்டதா என உறுதிப்படுத்தல் ஒன்று காணப்படவில்லை.	25 மாவட்டங்களின் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களினால் இனங்காணப்பட்டிருந்த அங்கவீனர்களுக்கு புனர்வாழ்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன்படி, தேவைப்பாட்டினை இனங்கண்ட பின்னர் தொழில் மயமாக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என. சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு தொழில் மயப்படுத்துவதற்கான வருடாந்த இலக்குகள் வழங்கப்பட்டு காலாண்டு ரீதியாக முன்னேற்றத்தை வினவி செயற்படுத்திய பின்னர் விசாரணை செய்முறையொன்று செயற்படுத்தப்படுவதனால் எதிர் காலத்தில் இலக்குகளை அடைந்துகொள்ளல் தொடர்பாக உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியுமாகும் என.	முழு நாடும் அடங்கக்கூடியவாறு வருடாந்தம் எதிர்பார்த்த இலக்குகளை காட்டப்பட வேண்டியதுடன், அந்த இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ளல் தொடர்பாக தர முறைமை பேணிச் செல்லப்பட வேண்டும்.

6. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியில் காணப்பட்ட வெற்றிட எண்ணிக்கை 375 ஆக காணப்பட்டது. அவற்றில் 28 பதவிகளில் 232 வெற்றிடங்கள் 01 முதல் 10 இற்கிடைப்பட்ட வருட	SSD/02/07/08/01(II) மற்றும் 2025 பெப்ரவரி 14 திகதிய அந்த சந்தர்ப்பம் அளவில் சமூக சேவைத் திணைக்களத்தில் பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களுக்காக	நீண்ட காலமாக காணப்படும் வெற்றிடங்களை குறைத்து மிகையின் மூலம் முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காலமாக காணப்படுவதுடன், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை I/II/II அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (சமூக சேவை) பதவிகளில் 68 மிகைகள் காணப்பட்டதுடன், அந்த சேவையை அதே தரத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (முதியோர் / சமூக சேவைகள்) பதவியில் 23 வெற்றிடங்கள் காணப்பட்டன.

ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் வேண்டி, அரச சேவையின் ஆட்சேர்ப்பு செய்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் பதவியணி முகாத்துவம் செய்வதற்காக அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட குழுவிற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டதுடன், அதற்காக அங்கீகாரம் கிடைத்த பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.